பக்கங்கள்: 11

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 வைகாசி 07 புதன்கிழமை 20.05.2020 கதிர் 196

## வெள்ளத்தில் மலையகம்!

மழை தொடர்கிறது

கொழும்பு, மே 20

மலையகத்தில் தொடரும் காற்றுடன் கூடிய கடும் மழையுடனான காலநிலையினால் மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு நாட்களாக பெய்துவரும் பக்கம் 04

## இனி அது ரகசியம் அல்ல!

ஜனாதிபதியாக இருந்த மைத்திரிபால சிறிசேனவின் அரசியல் சாதனை அளப்பரியது.

அவர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட போது கூட்டு எதிரணியின் பொது வேட்பாளர். சிறிலங்கா பக்கம் 02

# தமிழர் உரிமையை வென்றெடுக்க சர்வதேச ரீதியில் ஒன்றுபடுவோம்!



### நவநீதம்பிள்ளை அம்மையார் அறைகூவல்

கொழும்பு, மே 20

இலங்கையில் தொடர்ச்சியாகத் தமிழ் மக்களின் உரிமைகள் மீறப்பட்டுவரும் நிலையில், அவர்களுக்கான நீதியையும், இழப்பீட்டையும் பெற்றுக்கொடுப்பதை உறுதி செய்வதற்கு சர்வதேச ரீதியில் நாம் அனைவரும் ஒன்றிணைய வேண்டும்.

– இவ்வாறு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் முன்னாள் பக்கம் 04

## படையினர் மீது எவரும் கைவைக்க முடியாது

# சர்வதேச அழுத்தங்களுக்கு ஒருபோதும் அடிபணியேன்!

### உறுப்புரிமையிலிருந்து இலங்கையை விலக்குவேன்
### போர் வெற்றி விழாவில் ஜனாதிபதி கோட்டா சபதம்

கொழும்பு, மே 20

நாட்டுக்காக பெரும் அர்ப்பணிப்புகளைச் செய்த படையினர் தேவையற்ற அழுத்தத்துக்கு உள்ளாக நான் ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை. அதே வேளை, எமது நாட்டுக்கு அநீதியான வகையில் ஏதே னும் ஒரு சர்வதேச நிறுவனம் அல்லது சர்வதேச அமைப்பு தொடர்ந்தும் செயற்படுமாக இருந்தால் அந்த நிறுவனத்தின் அல்லது அமைப்பின் உறுப்புரிமையிலிருந்து இலங்கையை விலக்கிக்கொள்ள நான் ஒரு போதும் பின்நிற்கப் போவதில்லை.

– இவ்வாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார். பக்கம் 02



## 581 கடற்படைச் சிப்பாய்கள் கொரோனாவால் பாதிப்பு!

கொழும்பு, மே 20

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுடன் இதுவரை அடையாளம் காணப்பட்ட 1023 பேரில் 581 பேர் கடற்படையினர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தொற்றுக்குள்ளான கடற்படையினரில் பக்கம் 02

## இலங்கையில் கொரோனா உச்சம் ஆயிரத்தைத் தாண்டியது தொற்று

### நேற்று 31 பேர் அடையாளம்; இதுவரை 1,023 பேர் பாதிப்பு

கொழும்பு, மே 20

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 1,020 ஆக அதிகரித்துள்ளது.

நேற்று 31 பேர் புதிய தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்கள் அனைவரும் கடற்படையினர் என்று சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. அவர்களில் 28 பேர் ஒலுவிலில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த வெலிசறை கடற்படை முகாமைச் சேர்ந்த கடற்படையினர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் கொரோனா வைரஸ் பக்கம் 02

## மே 18 இல் வெளியான படம்!



கொழும்பு,மே 20

இலங்கையில் தான் தூதரக அதிகாரியாக இருந்தபோது தமிழீழ பக்கம் 02

## பழைய நாடாளுமன்றத்தைக் கூட்ட சு.க. ஒத்துழைப்பு வழங்கமாட்டாது!

### தயாசிறி திட்டவட்டம்

கொழும்பு, மே 20

பழைய நாடாளுமன்றத்தை மீண்டும் கூட்டுவதற்கு எதிரணியினர் முயற்சிக்கின்றனர். எனினும், அவ்வாறு செய்ய வேண்டிய தேவை தற்போது கிடையாது. அதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பக்கம் 02

## லெப்டினன்ட் கேர்ணலுக்கு பீல்ட் மார்ஷல் ஒருபோதும் 'சல்யூட்' அடிக்கவே மாட்டார்!

### ராஜபக்ஷ அரசின் திட்டத்துக்கு பொன்சேகா பதிலடி

கொழும்பு, மே 20

பத்தரமுல்லையிலுள்ள நாடாளுமன்றக் கட்டடத் தொகுதிக்கு அருகில் உள்ள படைவீரர்கள் நினைவிடத்தில் நேற்று நடைபெற்ற தேசிய போர் வீரர்கள் தின நிகழ்வில் முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவை கலந்துகொள்ள வைப்பதற்காக அரச தரப்பில் கடும் முயற்சிகள் எடுக்கப்பட்டன என்று தகவல்கள் தெரிவித்துள்ளன.

குறிப்பாக அந்த நிகழ்வில் சரத்பொன்சேகா, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு சல்யூட் அடித்து மரியாதை வழங்கும் காட்சியை ஊடகங்கள் வாயிலாகப் பிரசாரம் செய்ய அரச தரப்பில் அக்கறை காட்டப்பட்டது எனச் சிங்கள இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

சரத் பொன்சேகாவைத் தொடர்பு பக்கம் 02

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சுதந்திரக் கட்சியின் தலைவராக இருந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை எதிர்த்துத்தான் அவர் தேர்தலில் போட்டியிட்டார்.

ஜனாதிபதித் தேர்தலில் கிட்டிய அதிர்ஷ்டம் சு.க. தலைவர் பதவியையும் மஹிந்த ராஜபக்ஷவிடமிருந்து அவர் பறித்துக் கொள்ள வசதியாக இருந்தது.

சு.கவுக்கு அன்றுதான் சனி பிடித்துக் கெட்ட காலம் தொடங்கியது போலும். அதன் பிறகு வந்த 2015 ஓகஸ்ட் பொதுத் தேர்தலில் அவரது கட்சிக் கூட்டணிக்கு 96 எம்.பி. ஆசனங்கள் கிடைத்தன. அக்கட்சியும் நல்லாட்சி அரசில் பங்காளிக் கட்சியாக அமர்ந்தது.

கட்சிக்கு அன்று பிடித்த மங்குசனி இன்னும் அக்கட்சியை விட்டு இறங்கவில்லைப் போன்றே தெரிகின்றது.

2015 ஓகஸ்டில் தொடங்கிய அந்தக் கெட்டகாலம் 2019 நவம்பரில் மைத்திரிபால சிறிசேன தனது பதவியை இழந்த போது வெறும் 18 எம்.பிக்களே அவர் பக்கம் – அவருடன் எஞ்சியிருக்க – விட்டு வைத்தது.

தன்னிடமிருந்த அரசில் தனது கட்சியின் எம்.பிக்கள் எண்ணிக்கையை ஐந்தில் நான்கு வீதம் பறிகொடுத்த சாதனையை நிலைநாட்டிய அரசியல் தலைவர் மைத்திரி ஒருவர்தான். அதுவும் நாட்டின் நிறைவேற்றதிகாரம் என்ற வலிமையைக் கையில் வைத்துக் கொண்டுதான் இப்படி தனது கட்சி கழுதை தேய்ந்து கட்டெறும்பாக – உலக்கை தேய்ந்து உளிப்பிடியாக – சுருங்க இடமளித்துப் பார்த்திருந்தார் இந்த ஏமாளித் தலைவர்.

இப்போது தேர்தல் அறிவிக்கப்பட்டு விட்டது. ஐந்து முதல் பத்து எம்.பிக்களாவது அவர் தரப்புக்குக் கிடைக்குமா என்பதே சந்தேகம். இந்தப் பின்புலத்தில் இப்போது எஞ்சி இருப்பவர்களும் இனி இவருடன் மிஞ்சி நிற்பார்களா என்ற சந்தேகம். அதனால் நேற்றுமுன்தினம் நடைபெற்ற சுதந்திரக் கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் அவரின் கோரிக்கையின் பேரில் ஒரு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. செயற்குழுவின் ஒவ்வொரு உறுப்பினரையும் அவர் கட்சியை விட்டு மாற மாட்டார் என்பதை உறுதிப்படுத்தும் சத்தியப் பிரமாணக் கடிதம் ஒன்றை ஒப்பமிட்டுப் பெறும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. வாக்குறுதி அளிப்பதும் அதைக் காற்றில் பறக்க விடுவதும்தானே அரசியல்வாதிகளின் வேலை...?

2014 இறுதியில், முதல் நாள் சு.க. தலைவரும் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ஷவுடன் அவரது அலரி மாளிகை இல்லத்தில் கூடவிருந்து அப்பம் சாப்பிட்டு, இரவு விருந்து உண்ட போது, அப்போது சு.கவின் செயலாளராக இருந்த மைத்திரிபால சிறிசேனவிடம் இப்படிக் கட்சி மாறமாட்டார் என்று ஒரு கடிதம் எழுதி ஒப்பமிட்டுத் தரும்படி கேட்டிருந்தால் அவரும் கொடுத்திருப்பார்.

சாப்பிட்ட அப்பம் செமிக்க முன்னர் அடுத்த நாள் காலையில் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராகக் கூட்டு எதிரணியின் பொது வேட்பாளராக அவர் மாறியமை அப்படிக் கடிதம் வழங்கிய பின்னரும் நடந்துதான் இருக்கும்.

இப்படி சு.க. செயற்குழுக் கூட்டத்தில் கூறப்பட்ட – 'கட்சி மாற மாட்டேன்' என உறுதியளிக்கும் – கடிதத்தில் ஒப்பமிட முன்னாள் பிரதி சபாநாயகரும் கிரிக்கெட் நிர்வாகியுமான திலங்க சுமதிபால மறுத்து விட்டார் என்றும், ஏனையோர் ஒப்பமிட்ட கடிதங்களை கட்சித்தலைவர் மைத்திரிபாலவிடம் ஒப்படைத்தனர் என்றும் கூறப்பட்டது.

இன்னொரு விடயத்தினால் மைத்திரியார் கலங்கியிருக்கின்றார் என்று கேள்வி.

கடந்த ஆண்டு ஈஸ்டர் தாக்குதல்கள் குறித்து விசேடமாக – விவரமாக – முன்னெச்சரிக்கைத் தகவல்கள் வந்தும் உரிய நடவடிக்கை எடுக்கத் தவறியமைக்கு அப்போது ஜனாதிபதியாக இருந்த மைத்திரிபால சிறிசேனவும் பிரதான காரணம் என்று ஒரு குற்றச்சாட்டு உள்ளது.

ஈஸ்டர் குண்டுத் தாக்குதலுக்குப் பொறுப்பானவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் என்று கொழும்புப் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் தொடர்ந்து பகிரங்கமாகக் கோரி வருகின்றார்.

அவர் சூசகமாகச் சுட்டிக்காட்டும் விடயங்களில் அப்போது முழுப் பாதுகாப்புக்கும் பொறுப்பாக இருந்த ஜனாதிபதியின் செயற்திறனின்மையும் அடங்கும் என்று தெரிகின்றது.

அவருக்கு எதிராகவும் உரிய சட்ட நடவடிக்கையை எடுங்கள் என்பது பேராயரின் வற்புறுத்தலாக இருக்கின்றதாம்.

*“பொதுத் தேர்தல் முடியும் வரை பொறுங்கள் ஆகட்டும் பார்க்கலாம்!”* என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதிலளித்திருக்கின்றார் என்றும் ஒரு தகவல்.

வெறுமனே ரிஷாத்தும், மங்களவும் மட்டும்தான் இலக்கு என்று அல்ல. ரணிலில் இருந்து சிறிசேன வரை யார் மீதும் அவர்கள் செய்தவை, செய்யாதவை என்று பட்டியலிட்டு சட்டத்தின் பேரில் விலங்குகள் எந்நேரமும் பாயலாம் என்கின்றன சில தரப்புகள்.

ராஜபக்ஷக்களின் அதிகாரத்தின் கீழ் எதுவும் நடக்கலாம். எப்போதும் நடக்கலாம். எவருக்கு எதிராகவும் நடக்கலாம். தொப்பி நம் தலையில் விழாதவரை எங்கள் தலை 'safe' என்று நம்பலாம். அவ்வளவுதான்!

–மின்னல்–

## லெப்டினன்ட்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கொண்டு அவர் நிகழ்வில் கலந்துகொள்வதை உறுதிப்படுத்த அரச தரப்பில் கடும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எனினும், இவற்றுக்குப் பொன்சேகா பதிலளிக்கவில்லை எனவும் கூறப்பட்டுள்ளது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் ஊடக இணைப்பதிகாரியான ரொஹான் வெலிவிட்ட, நேற்றுமுன்தினம் சரத் பொன்சேகாவைத் தொடர்புகொள்ள முயற்சித்துள்ளார். எனினும், அது பயனளிக்கவில்லை.

இது தொடர்பாக தனது அரசியல் நண்பர்களிடம் கருத்து வெளியிட்டுள்ள சரத் பொன்சேகா, பீல்ட் மார்ஷல் ஒருவர் ஒருபோதும் லெப்டினன்ட் கேர்ணல் ஒருவருக்கு சல்யூட் அடித்து மரியாதை செலுத்த மாட்டார். நான் அந்த நிகழ்வுக்குச் செல்லமாட்டேன் என்று கூறினார் என பொன்சேகாவின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

கோட்டாபய ராஜபக்ஷ லெப்டினன்ட் கேர்ணல் தரத்திலிருந்தே ஓய்வு பெற்றார் என்பதும் –

அந்தத்தரநிலைக்கு அப்பால் கேர்ணல், பிரிகேடியர், மேஜர் ஜெனரல், லெப்டினன்ட் ஜெனரல், ஜெனரல் நிலைகளை எல்லாம் தாண்டி பீல்ட் மார்ஷல் பட்டத்தை சரத் பொன்சேகா பெற்றிருக்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

## மே 18இல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவருடன் எடுத்துக்கொண்ட புகைப்படத்தை இந்திய மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரத்துறை அமைச்சர் ஹர்தீப் சிங் பூரி தனது ருவிட்டர் தளத்தில் வெளியிட்டுள்ளார்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நாளான நேற்று முன் தினம் இந்தப் பதிவை அவர் இட்டுள்ளார்.

1987–ஆம் ஆண்டு கொழும்பு நகரில் உள்ள இலங்கைக்கான இந்தியத் தூதரகத்தில் நான் இள நிலை அதிகாரியாக இருந்தபோது இலங்கையில் அரச படைகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் உள்ளிட்ட அமைப்பினருக்கும் இடையில் உள்நாட்டுப் போர் உச்ச கட்டத்தில் இருந்தது.

அப்போது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனைச் சந்தித்தேன். மோதலை முடிவுக்கு கொண்டு வர இந்தியா மேற்கொண்டு வரும் முயற்சிகளை அவருக்கு எடுத்துக் கூறி, டெல்லிக்கு வந்து அமைதி ஒப்பந்தத்தில் கையெழுத்திடுமாறு பிரபாகரனிடம் வலியுறுத்தினேன் – எனவும் அவர் தனது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

வல்வெட்டித்துறையில் இருந்து இந்திய விமானப்படை விமானத்தில் பிரபாகரனுடன் தான் பயணம் செய்தார் எனத் தெரிவித்துள்ள ஹர்திப்சிங் பூரி, அந்த சமயத்தில் தமிழக முதலமைச்சராக இருந்த எம்.ஜி.ஆர். உள்ளிட்ட பலரும் அமைதி ஏற்படத் துணையாக இருந்தனர் எனவும் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து அமைதிக்கான முயற்சிகளை இந்திய அரசு மேற்கொண்டு வந்த போதிலும் அது பயனளிக்கவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## பழைய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஒத்துழைப்பும் வழங்காது.

– இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

சுதந்திரக் கட்சித் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது:–

திங்கட்கிழமை நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன. விசேடமாக நடைபெறவுள்ள பொதுத்தேர்தலுக்கான நடவடிக்கைகள் தொடர்பில் தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

பொதுத்தேர்தல் நடத்தப்படும்போது சுகாதார ஆலோசனைகளுக்கு அமைய தேர்தலை நடத்துவதற்கு அரசுக்கு ஒத்துழைப்பு வழங்குவது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றம் இன்றி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அரசை முன்னெடுத்துச் செல்லும்போது பெரும் பிரச்சினைகளை எதிர்கொள்வார். எனவே, பொதுத்தேர்தலை ஜனாதிபதியால் காலம் தாழ்த்த முடியாது. எனினும், தற்போதைய நிலைமை காரணமாக ஜூன் 20ஆம் திகதி வரை தேர்தல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. அது தேர்தல்கள் ஆணைக்குழுவினால் எடுக்கப்பட்ட தீர்மானமாகும்.

கொரோனா வைரஸ் பரவல் காரணமாகவே இவ்வாறு தேர்தல் காலம் தாழ்த்தப்படுகின்றது. தேர்தல் ஒத்திவைக்கப்பட்டுள்ள இந்தநிலையில் நாட்டை ஸ்திரமற்றதாக்கும் முயற்சியில் எதிரணியினர் ஈடுபட்டுள்ளனர். பழைய நாடாளுமன்றத்தை மீண்டும் கூட்டுவதற்கு அவர்கள் முயற்சிக்கின்றனர். எனினும், அவ்வாறு செய்ய வேண்டிய தேவை கிடையாது.

எதிரணியினர் நாடாளுமன்றத்தில் இடைக்கால வரவு – செலவு திட்டத்தை நிறைவேற்றுவதற்கு ஒத்துழைப்பு வழங்காமையே தற்போது ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்குக் காரணமாகும்.

தேர்தல் தொடர்பில் உயர்நீதிமன்றத்தின் நிலைப்பாட்டைப் பெறுமளவுக்கு நாடு ஸ்திரமற்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. தேர்தல் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு எடுக்கும் தீர்மானங்களுக்கு நாம் ஒத்துழைப்பு வழங்குவோம்.

எதிரணியினர் மக்கள் பற்றி சிந்திக்காது பொதுத்தேர்தலைக் காலம் தாழ்த்தி அரசியலை முன்னெடுக்கவே முயற்சிகின்றனர். அரசியல் வேலைத்திட்டங்களை விஸ்தரிக்கின்றனர். நாம் அதனை எதிர்க்கின்றோம். பொதுமக்களுக்கு தீங்கு விளைவிக்காமல் தேர்தலை நடத்துவதற்கான தொடர் திட்டங்களை தேர்தல்கள் ஆணைக்குழுவில் முன்வைக்கவுள்ளோம் – என்றார்.

## இலங்கையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தொற்றியதாக அடையாளம் காணப்பட்டுள்ள 1,021 பேரில் இதுவரை 569 குணமடைந்துள்ளனர். 09 பேர் உயிரிழந்துள்ள நிலையில், 445 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதனிடையே கொரோனா வைரஸ் தொற்று சந்தேகத்தில் மேலும் 135 பேர் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

## சர்வதேச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பத்தரமுல்லையிலுள்ள நாடாளுமன்றக் கட்டடத் தொகுதிக்கு அருகில் உள்ள படைவீரர்கள் நினைவுத்தூபி வளாகத்தில் நேற்று மாலை நடைபெற்ற தேசிய படைவீரர்கள் நினைவு தினமான போர் வெற்றி விழாவில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

உலகின் பலம்வாய்ந்த நாடுகளின் தலைவர்கள் கூட தமது நாட்டின் படையினருக்கு எதிராக எந்தவொரு நடவடிக்கையையும் எடுப்பதற்கு அனுமதிக்கப்போவதில்லை எனத் தெரிவித்திருக்கின்ற சூழ்நிலையில், எம்மைப் போன்ற ஒரு சிறிய நாட்டில் இத்தகைய அர்ப்பணிப்புகளைச் செய்துள்ள படையினரைப் பாதுகாப்பதற்கு நான் அர்ப்பணிப்புடன் உள்ளேன்.

இராணுவத்தில் 20 வருடங்கள் செயற்திறமான சேவையில் ஈடுபட்ட அதிகாரி என்ற வகையிலும், பின்னர் 10 வருடங்கள் பாதுகாப்புச் செயலாளராகப் பதவி வகித்தவர் என்ற வகையிலும், இந்த நாட்டின் ஒரு பிரஜை என்ற வகையிலும் எமது படையினர் செய்த அர்ப்பணிப்புகளை நான் நன்கறிவேன்.

போரின் வலிகள் எனக்கு நன்றாகத் தெரியும் என்பதால் பெரும் தியாகங்களைச் செய்து அனைத்து இலங்கையர்களுக்கும் சமாதானத்தை ஏற்படுத்தித் தந்த எமது படையினரின் கௌரவத்துக்கும் நற்பெயருக்கும் இழுக்கை ஏற்படுத்துவதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சிகளுக்கு நான் ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை.

படையினர் உயிர்த் தியாகங்கள் செய்து பாதுகாத்த இந்த நாட்டை அனைத்துப் பிரஜைகளும் சமாதானமாகவும் மகிழ்ச்சியாகவும் கண்ணியமாகவும் வாழக்கூடிய சுபீட்சமான தேசமாக மாற்றுவது படையினருக்குச் செய்யும் உயர்ந்த கௌரவமாகும் – என்றார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ரணவிரு சேவா அதிகார சபையின் தலைவர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் நந்தன சேனதீர வரவேற்புரை நிகழ்த்தினார்.

ஜனாதிபதி, பிரதமர், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முப்படைகளின் தலைவர்கள் உள்ளிட்டோர் படைவீரர்களின் நினைவுத் தூபிக்கு மலரஞ்சலி செலுத்தினர்.

நினைவு தின விழா முழுமையாக சுகாதார அமைச்சின் அறிவுறுத்தல்களைப் பின்பற்றி இடம்பெற்றது.

மதத் தலைவர்கள், அமைச்சரவை அமைச்சர்கள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஜனாதிபதியின் செயலாளர், பாதுகாப்பு செயலாளர், முப்படைகளின் தலைவர்கள், முன்னாள் கடற்படை மற்றும் விமானப் படை தளபதிகள், பதில் பொலிஸ்மா அதிபர், சிவில் பாதுகாப்புப் படை பிரதானி உட்பட படையினர், படையினரின் குடும்பத்தினர் ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## 581 கடற்படைச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
209 பேர் இதுவரை குணமடைந்துள்ளனர் எனவும், ஏனையோர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் கடற்படையின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

தொற்றிலிருந்து குணமடைந்து வைத்தியசாலைகளிலிருந்து வெளியேறிய 209 கடற்படையினரும் 14 நாட்களுக்குத் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் எனவும் கடற்படையின் ஊடகப் பிரிவு மேலும் கூறியுள்ளது.

# பூநகரி – சங்குப்பிட்டி வீதியில் நேற்று விபத்து: மூவர் படுகாயம்

பூநகரி - சங்குப்பிட்டி வீதியின் மட்டுவில்நாடு பகுதியில் டிப்பர் ஒன்று விபத்துக்குள்ளாகியதில் மூவர் படுகாயமடைந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று காலை 10.30 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மட்டுவில்நாடு பழைய உதவி அரசாங்கஅதிபர்பணிமனைக்குஅண்மித்த பகுதியில் மோட்டார் சைக்கிள் ஒன்றை டிப்பர் முந்திச்செல்ல முற்பட்ட போதே இவ்விபத்து இடம் பெற்றுள்ளது.

விபத்தில் மோட்டார் சைக்கிள் சாரதி மற்றும் பாதசாரிகள் இருவர் பலத்த காயங்களுக்கு உள்ளாகியுள்ள நிலையில், பூநகரி வைத்தியசாலையில் சிகிச்சைகளுக்காகஅனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

விபத்துக் குறித்த மேலதிக விசாரணைகளை பூநகரி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.







## இந்தியாவிலிருந்து கற்பிட்டி வழியாக

# கடலட்டைகள் கடத்தல் முயற்சி; பொலிஸாரினால் நால்வர் கைது



சட்டவிரோதமாகக் கடலட்டைகளைக் கடத்திய நால்வர் பொலிஸாராக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தியாவிலிருந்து சட்டவிரோதமான முறையில் இரண்டு படகுகள் மூலம் கடலட்டைகளை கடல் வழியாகக் கொண்டு வந்து பாலக்குடா சந்தியில் வைத்து வாகனத்தில் ஏற்றுவதற்கு முற்பட்டவேளை பொலிஸாரால்நால்வர்கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கற்பிட்டி பொலிஸாருக்குக் கிடைக்கெப்பெற்ற இரகசியத் தகவலுக்கமைய நேற்றுக் காலை இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது 763 கிலோகிராம் கடலட்டைகள் கைப்பற்றப்பட்டன. கடத்தலுக்காகப் பயன்படுத்தப்பட்ட 2 படகுகள் மற்றும் சொகுசு வான் ஒன்றும் கைப்பற்றப்பட்டன.

இந்நிலையில் சந்தேகத்தின் பேரில் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடலட்டைகளை சொகுசு வான் மூலம் கொழும்பிற்குக் கடத்திச்செல்ல முற்பட்டதாக முதற்கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. தொடர்ந்தும் கற்பிட்டி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# 300 இலங்கயர் குவைத்திலிருந்து நாடு திரும்பினர்

குவைத்தில் தங்கியிருந்த 300 இலங்கையர்களுடன் விமானம் ஒன்று நேற்று மாலை 6.50 மணி அளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளது.

குவைத் விமான சேவைக்கு சொந்தமான விசேட விமானத்தின் ஊடாக இந்த இலங்கையர்கள் நாட்டிற்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்




# போதையில் இளஞரை தாக்கிய நால்வர் கைது

திருகோணமலை, மே 20

திருகோணமலை உப்புவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் மது போதையில் இளைஞர் ஒருவரைத் தாக்கி காயப்படுத்திய நால்வர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நபர்களை இம்மாதம் 27 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு திருகோணமலை நீதிமன்ற நீதிவான் பி.சிவக்குமார் நேற்று உத்தரவிட்டுள்ளார்.

வரோதய நகர்,அன்புவழிபுரம் மற்றும் நிலாவெளி பகுதியைச் சேர்ந்த 29,37,39,48 ஆகிய வயதுகளையுடைய நால்வரே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

மது போதையில் சந்தேக நபர்கள் நால்வரும் இணைந்து வீதியால் சென்ற இளைஞர் ஒருவரைத் தாக்கி காயப்படுத்திய சம்பவத்தின் அடிப்படையிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# கொட்டகலையில் வெள்ளநீரில் அள்ளுண்டவர் மீட்கப்பட்டார்!

கொழும்பு, மே 20

கொட்டகலை ஸ்டோனிகிளிப் தோட்டப்பகுதியில் நீரில் அடித்துச்செல்லப்பட்ட நபரொருவர் படுகாயமடைந்த நிலையில் நாவலப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

பெய்து வரும் அடைமழையால் ஆடுகள் இருந்த பட்டி மீது மண்மேடொன்று சரிந்து விழுந்துள்ளது. இதனையடுத்து பட்டிக்குள் இருந்த ஆடுகளை காப்பாற்றுவதற்காக அவர் சென்றுள்ளார்.

எனினும், வெள்ளம் பெருக்கெடுத்ததால் மூன்று ஆடுகள் நீரில் அடித்துச் செல்லப்பட்டன. அவரும் தவறி நீரில் விழுந்துள்ளார்.

உடனடியாக செயற்பட்ட பிரதேசவாசிகள் அவரைக் காப்பாற்றி, வைத்தியசாலையில் அனுமதித்தனர்





**வீட்டுத்தோட்ட விதைகள் விற்பனைக்கு**

வீட்டுத்தோட்டத்திற்கு தேவையான விதைகள் விற்பனைக்கு உண்டு.
வெண்டி, பயிற்றை, கத்தரி, கீரை, தக்காளி, பாகல், மிளகாய், சோளம், பூசணி, முள்ளங்கி, பீற்றூட், புடோல், கறிமிளகாய், சிறகவரை.
(வீடுகளிற்கும் விநியோகிக்கப்படும்.)
தொடர்புகளுக்கு: 077 411 4422

**புழுக்கொடியல் விற்பனைக்கு.**

சுத்தமான சுகாதாரமான முறையில் பொதியிடப்பட்ட புழுக்கொடியல் 1/2kg, 1/4kg பைக்கற்றுகளில் விற்பனைக்கு உண்டு.
தேவைப்படின் வீடுகளுக்கும் விநியோகம் செய்யப்படும். (மேலதிக கட்டணத்துடன்)
தொடர்புகளுக்கு: 076 100 5277

**வீடு வாடகைக்கு தேவை**

வியாபார நிறுவனம் ஒன்றிற்கு யாழ் நகரை அண்டிய பகுதியில் வாடகைக்கு வீடு தேவை.
தொடர்புகளுக்கு:-
071 7777 559

## நமது பார்வை
உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – onlinekathir.com

# பொலிஸாரைத் தப்ப விடாது சட்டத்தின் முன் நிறுத்துவோம்!

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் காலம் முடிவுற்றுள்ளது.

கொரோனா நெருக்கடி, பொலிஸார் மற்றும் பாதுகாப்புப் படையினரின் சட்டமுறையற்ற நெருங்குவாரங்கள், மோசமான கெடுபிடிகள் போன்றவற்றுக்கு மத்தியில் அந்த நினைவேந்தலை தமிழர் தாயகம் மன அமைதியுறும் வகையில் இம்முறை செய்து முடிக்க இயலவில்லை.

காரணமற்ற கொரோனாவைக் காட்டி இந்தத் தடையை இலக்கு வைத்து விதித்திருக்கின்றது பொலிஸ்.

பொலிஸில் சில பிரிவுகள் இது விடயத்தில் தீங்கெண்ணத்துடன் செயற்பட்டிருக்கின்றன என்பது வெளிப்படையானது. உண்மையானது. யதார்த்தமானது.

பொலிஸாரும் படையினரும் இம்முறை இலக்கு வைத்தது தமிழ்த் தலைவர்களைத்தான். பொதுமக்களை அல்ல.

இதில் கவனிக்க வேண்டிய ஒன்று அந்த இலக்குகள், அதில் அவர்கள் நடந்து கொண்ட விதங்கள், செயற்பாடுகள் என்பன முற்றும் முழுதாக சட்ட விரோதமான – சட்ட முரணான – நடவடிக்கைகள் என்பதுதான்.

★ சமூக இடைவெளியைப் பேணியபடி நினைவேந்தலில் ஈடுபட்ட தலைவர்களுக்குத்தான் அவர்கள் தொல்லை கொடுத்திருக்கின்றார்கள்.

★ தமிழரசுக் கட்சியின் அலுவலகங்கள் உட்பட பல இடங்களில் நடைபெற்ற நினைவேந்தல் நிகழ்வுகளுக்கு எதிராக கொரோனா பரவுகை என்ற அச்சுறுத்தலைக் காட்டியே அவர்கள் நீதிமன்ற உத்தரவுகளைப் பெற்றுள்ளனர். ஆனால் அப்படி கொரோனா அச்சுறுத்தலைக் காட்டி உத்தரவு பெறும் சட்ட அதிகாரம் அவர்களுக்கு (பொலிஸாருக்கு) இல்லை என்பதைத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் நீதிமன்றத்தில் பொலிஸாருக்கு எதிராக முன்னெடுத்த முறைப்பாட்டில் சட்டத்தரணி அன்ரன் புனிதநாயகம் தெளிவாக எடுத்துரைத்திருக்கின்றார். அதை நீதிமன்றமும் ஏற்றுள்ளது.

★ நினைவேந்தல் நிகழ்வுக்குச் சென்ற பல தமிழ் அரசியல் தலைவர்களை ஆங்காங்கே பொலிஸாரும், இராணுவத்தினரும் வழிமறித்துத் திருப்பி அனுப்பியிருக்கின்றனர்.

ஊரடங்கு இல்லாத அத்தகைய நேரத்தில் அப்படி பிரமுகர்களை வழிமறித்துத் திருப்பி அனுப்புவதற்கு சட்ட அதிகாரமோ, உரிமையோ அவர்களுக்கு இல்லை. நாட்டில் அவசரகால நிலைமை கூட இல்லை.

இந்தச் சூழலில்தான் பொலிஸாரும் படையினரும் இவ்வளவு அராஜகத்தையும், அடக்குமுறையையும் முன்னெடுத்திருக்கின்றனர்.

முள்ளிவாய்க்காலில் இருக்கும் பொலிஸ் அதிகாரி சமூக இடைவெளியைப் பேணியபடி நினைவேந்தல் நிகழ்வு நடைபெறுவதற்கு அனுமதித்துப் பார்த்திருந்திருக்கின்றார். தான் அங்கு குசும்பு ஏதும் பண்ணப்போனால் நீதிமன்றுக்கு விளக்கம் சொல்ல மன்றுக்குப் போய் நிற்க வேண்டிவரும் என்ற யதார்த்தம் அவருக்குப் புரிந்திருக்கின்றது.

அப்படியானால் –

வடக்கிலும், கிழக்கிலும் நினைவேந்தல் நிகழ்வுகளுக்கு எதிராக சட்டமுறையற்ற விதத்தில் நீதிமன்றங்களைத் தவறாக வழிநடத்தித் தடை உத்தரவுகளைப் பெற்ற பொலிஸாருக்கும் –

நினைவேந்தலுக்குச் சென்ற அரசியல் தலைவர்களை சட்டமுறையற்ற விதத்தில் மறித்த படையினர் மற்றும் பொலிஸாருக்கும் – எதிராகத் தமிழ்த் தலைவர்கள் என்ன செய்யப் போகின்றார்கள்?

நடந்தது நடந்து முடிந்து விட்டது. இனி வருவதைப் பார்ப்போம் என்று வாளாவிருக்கப் போகின்றார்களா?

தமிழ் தேசிய மக்கள் முன்னணியினரைத் தனிமைப்படுத்தும் விதத்திலான நீதிமன்ற உத்தரவைப் பெற்ற பொலிஸாருக்கு அதே நீதிமன்றம் மூலம் தகுந்த பதிலடி கொடுத்தனர் முன்னணியினர்.

இப்படித் தொல்லை கொடுத்த ஏனைய பொலிஸார் மற்றும் இராணுவத்தினருக்கும் எதிராகத் தனித் தனியாகச் சட்ட நடவடிக்கை எடுக்க விருக்கிறோம் என்று முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கூறியிருக்கின்றமை அவரது தலைமைத்துவத்தின் சிறப்பு. அந்த நடவடிக்கையை அவரும் அவரது கட்சியினரும் தொடரவேண்டும். அதைப் பார்த்து ஏனைய தமிழ்க் கட்சிகளின் தலைவர்களும் தங்கள் பங்கிற்கு சட்டக் கடமையைப் பொறுப்போடு நடைமுறைப்படுத்த முன்வர வேண்டும்.

சம்பந்தப்பட்ட பொலிஸாருக்கு எதிரான சட்ட நடவடிக்கைகளை ஒருவர் தவறாது முன்னெடுத்து, வழக்குகள் மேல் வழக்குகள் தொடர்ந்து. சம்பந்தப்பட்ட பொலிஸாருக்குச் சரியான பாடம் புகட்ட வேண்டும்.

இல்லையேல் தெற்கின் சிங்களப் பேரினவாத தலைவர்களின் ‘ஏஜெண்ட்’ ஆக சிங்களப் பொலிஸ் இங்கு இருந்து கொண்டு அட்டகாசத்தைத் தொடர்வது தடுக்கப்படாத கதையாகத் தொடரும்.

இப்போதே இவர்களை சட்டத்தில் மாட்டிவிட்டுத் திருத்தாவிட்டால் வரும் மாவீர் தினத்தின் போதும் இதேபோல சவுக்கைச் சொருகிக் கொண்டு எங்களைத் திருத்த இன்னொரு தடவை வருவார்கள்.

அதைத் கட்டுப்படுத்த இந்தப் பொன்னான சந்தர்ப்பத்தை இப்போதே தவறாமல் பயன்படுத்துங்கள்!

# சு.கவில் இருந்து தூக்கி வீசப்பட்டார் சமரசிங்க



கொழும்பு, மே 20

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் முன்னாள் பேச்சாளர் மஹிந்த சமரசிங்க கட்சிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்.

நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி சார்பில் வேட்புமனுவைத் தாக்கல் செய்ததன் காரணமாகவே அவர் கட்சியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார் என்று சுதந்திரக் கட்சியின் பேச்சாளர் வீரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

மஹிந்த சமரசிங்க இம்முறை நாடாளுமன்றத் தேர்தலில்போட்டியிடுவதற்கு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி சார்பிலேயே வேட்புமனு தாக்கல் செய்துள்ளார். அத்தோடு அவர் கட்சிலிருந்து விலகுவதாகவும் அறிவித்திருந்தார். அதற்கமைய திங்கட்கிழமை இடம்பெற்ற கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணிக்கும் இடையில் எவ்வித முரண்பாடுகளும் கிடையாது. ஆனால், இரண்டும் வெவ்வேறு கட்சிகளாகும். எனவே தான் சுதந்திரக் கட்சி உறுப்பினராக இருந்து கொண்டு ஏனைய கட்சிகளில் இணைந்து செயற்படுபவர்கள் கட்சியிலிருந்து நீக்கப்படுகின் றனர். இது கட்சியின் ஒழுக்க விதிகளுக்கு உட்பட்ட செயற்பாடாகும் எனவும் வீரகுமார திஸாநாயக்க மேலும் கூறினார்.

# போர் வெற்றி ஒத்திகையில் பங்கேற்ற இரண்டு கடற்படையினருக்கு தொற்று!

கொழும்பு, மே 20

11ஆவது தேசிய போர் வீரர்கள் தின நிகழ்விற்கான ஒத்திகையில் கலந்து கொண்ட இரண்டு கடற்படையினருக்கு கொரோனா வைரஸ் தொற்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அவர்களுடன் தொடர்பிலிருந்த 30 கடற்படையினர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என கடற்படைப் பேச்சாளர் இசுரு சூரியபண் டார தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரசினால் பாதிக்கப்பட்ட இரு கடற்படை வீரர்களையும் மேலதிக பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தியுள்ளனர் எனவும் பரிசோதனை முடிவிற்காக காத்திருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் முதலில் மேற் கொள்ளப்பட்ட சோதனைகளிற்கும் பின்னர் எடுக்கப்பட்ட சோதனைகளிற்கும் இடையில் முடிவுகளில் வித்தியாசமிருந்துள்ளது என தெரிவித்துள்ள அவர், இதன் காரணமாகவே இரண்டாவது சோதனையை மேற்கொண்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

அவர்களுடன் தொடர்பிலிருந்த கடற்படையினரையும் தனிமைப்படுத்தியுள்ளனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## தமிழர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆணையாளர் நவநீதம்பிள்ளை அம்மையார் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் மூன்று தசாப்த காலமாக இடம்பெற்ற போர் நிறைவுக்கு வந்து 11 வருடங்கள் பூர்த்தியடைந்துள்ள நிலையில், அவர் வெளியிட்டுள்ள காணொலி ஒன்றிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் அவர் மேலும் கூறியிருப்பதாவது:–

இலங்கையில் கடந்த 2009ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் திகதி முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட போரின்போது உயிரிழந்தவர்களை நினைவு கூருகிறேன். இந்த நீண்டகாலப் போரில் சுமார் ஒரு இலட்சத்து 46 ஆயிரத்துக்கும் அதிகமான தமிழர்கள் உயிரிழந்தார்கள்.

எனவே, அவ்வாறு உயிரிழந்த தமிழர்களை இந்நாளில் நினைவுகூரும் அதேவேளை, தொடர்ந்தும் நீதி, சுதந்திரம் மற்றும் இழப்பீடு ஆகியவற்றை முன்னிறுத்திய அவர்களது போராட்டங்களால் கவரப்பட்டுள்ளோம்.

ஐக்கிய நாடுகள் சபையால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் பிரகாரம் இறுதிப்போரின் போது போர்க்குற்றங்கள் இடம்பெற்றன எனக் கூறப்பட்டாலும், இன்னமும் இது குறித்த முறையான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுப் பொறுப்புக்கூற வேண்டியவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படவில்லை.

மாறாக சிறுவர் உட்பட எண்மரைப் படுகொலை செய்த குற்றத்துக்காக நீதிமன்றத்தால் தண்டனை வழங்கப்பட்ட ஒரு முன்னாள் இராணுவ அதிகாரிக்கு ஜனாதிபதி மன்னிப்பு வழங்கி விடுதலை செய்தார். இது நீதிக்குப் புறம்பானதாகும்.

இலங்கையில் இன்னமும் தமிழர்களின் உரிமைகள் தொடர்ச்சியாக மீறப்பட்டு வருகின்றன. படையினரால் கைப்பற்றப்பட்டப் பொதுமக்களின் காணிகள் இன்னமும் முழுமையாக விடுவிக்கப்படவில்லை.

இலங்கையின் தேசிய கீதத்தைத் தமிழ் மொழியில் பாடுவது புறக்கணிக்கப்பட்டுள்ளது. அத்தோடு இன்னமும் 200 பேர் வரையில் சிறைச்சாலைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு தொடர்ச்சியாகத் தமிழ் மக்களின் உரிமைகள் மீறப்பட்டுவரும் நிலையில், அவர்களுக்கான நீதியையும், இழப்பீட்டையும் பெற்றுக்கொடுப்பதை உறுதிசெய்வதற்கு சர்வதேச ரீதியில் நாம் அனைவரும் ஒன்றிணைய வேண்டும் – என்றார்.

## வெள்ளத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர் மழையினால் பல பகுதிகளில் மண்சரிவுகள் ஏற்பட்டுள்ளன.

மலையகத்தில் தொடரும் காற்றுடன் கூடிய கடும் மழையுடனான காலநிலையினால் மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. கடந்த இரண்டு நாட்களாக பெய்துவரும் தொடர் மழையினால் பல பகுதிகளில் மண்சரிவுகள் ஏற்பட்டுள்ளன.

அத்துடன், குடியிருப்புகள், ஆலயங்கள் என்பனவும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. வீதி போக்குவரத்துக்களும் தடைப்பட்டுள்ளதால் பொதுமக்கள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர். நாவலப்பிட்டி நகரம், பலாங்கொடை நகரில் பேருந்து நிலையம் என்பனவும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

இந்தநிலையில், சீரற்ற வானிலையினால், இரண்டு பேர் உயிரிழந்துள்ளனர். பெல்மடுலை பகுதியில் மண்மேடு சரிந்து வீழ்ந்ததால், பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார். அத்துடன், இரத்தினபுரி, அலுகல பகுதியில் குழந்தை ஒன்றும் உயிரிழந்துள்ளதாக மாவட்ட செயலாளர் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, ஹற்றன் – கொழும்பு பிரதான வீதியின் பல இடங்களில் மண்சரிவு ஏற்பட்டுள்ளதால், நேற்று காலை 11 மணியிலிருந்து போக்குவரத்து முற்றாகத் தடைப்பட்டுள்ளது.

மஸ்கெலியா மவுசாகலை,காசல்ரி,நோட்டன் விமலசுரேந்திர, மேல்கொத்மலை நீர்தேக்கங்களின் நீர்மட்டம் வெகுவாக உயர்ந்துள்ளதால், ஆறுகளின் கரையோர பகுதியிலுள்ளவர்கள் அவதானமாக இருக்குமாறும் அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

தற்போது நிலவும், சீரற்ற வானிலை காரணமாக நேற்று மட்டும். 436 குடும்பங்களைச் சேர்ந்த 1433 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று இடர் முகாமைத்துவ நிலையம் தகவல் வெளியிட்டுள்ளது.

## கொரோனா போராளிகளை மகிழ்விக்கும் நிகழ்வில்

# விமானம் விழ்ந்து கனடாவில் பெண் விமானி உயிரிழப்பு!



கனடாவில் கொரோனா போராளிகளுக்கு மதிப்பளிக்கும் சாகசத்தின் போது வீட்டின் மீது விமானம் விழுந்து தீப்பிடித்ததில் பெண் விமானி பரிதாபமாக உயிரிழந்தார்.

கொரோனா வைரசுக்கு பயந்து உலகம் முழுவதும் மக்கள் வீடுகளுக்குள் முடங்கி இருக்கும் வேளையில் மருத்துவர்கள், தாதியர்கள் உள்ளிட்ட சுகாதாரப் பணியாளர்கள், பொலிஸார், தீயணைப்பு வீரர்கள் மற்றும் துப்புரவுப் பணியாளர்கள் ஆகியோர் சேவை மானப்பான்மையுடன் மக்களுக்காக களப்பணியாற்றி வருகின்றனர்.

கொரோனா வைரசுக்கு எதிரான போரில் முன்நின்று போராடி வரும் அவர்களை உலக நாடுகள் அனைத்தும் பல்வேறு முறைகளில் மதித்து வருகின்றன. அந்த வகையில் கனடாவில் கொரோனா போராளிகளுக்கு மதிப்பளிக்கும் விதமாக அந்த நாட்டு விமானப்படை விமானங்கள் நேற்று முன்தினம் வான் சாகசத்தில் ஈடுபட்டன.

நாடு முழுவதும் பல்வேறு மாகாணங்களில் விமானப்படை விமானங்கள் வானில் பறந்து சாகசங்களை நிகழ்த்தின. அந்த வகையில் பிரிட்டிஸ் கொலம்பியா மாகாணம் கம்லூப்ஸ் நகரில் உள்ள விமான நிலையத்தில் இருந்து 2 விமானப்படை விமானங்கள் சாகச நிகழ்ச்சிக்காக புறப்பட்டு சென்றன. 2 விமானங்களிலும் தலா 3 விமானிகள் இருந்தனர்.

புறப்பட்ட சில நொடிகளில் ஒரு விமானத்தில் திடீரென தீப்பிடித்தது. இதனை அறிந்த விமானிகள் உடனடியாக விமானத்தை தரையிறக்க முயற்சி செய்தனர். ஆனால் அவர்களின் கட்டுப்பாட்டை இழந்த விமானம் விமான நிலையத்தையொட்டி இருக்கும் குடியிருப்பு பகுதியில் உள்ள ஒரு வீட்டின் மீது விழுந்தது.

இதனால் அந்த வீட்டில் இருந்த 2 பேர் அலறியடித்தபடி வெளியே ஓடி வந்தனர். இதற்கிடையில் விமானத்தில் பற்றி எரிந்த தீ வீட்டிலும் பரவி கொழுந்து விட்டு எரிந்தது. இதில் வானுயரத்துக்கு கரும் புகை மண்டலம் உருவானது. வீட்டின் உரிமையாளர்கள் மற்றும் அக்கம்பக்கத்தில் இருந்தவர்கள் போராடி தீயை அணைத்தனர்.

முன்னதாக விமானம் வீட்டின் மீது விழுவதற்கு சில வினாடிகளுக்கு முன்னர் ஒரு விமானி மட்டும் பாராசூட் மூலம் வெளியே குதித்து உயிர் தப்பினார். மற்ற 2 விமானிகளும் விபத்தில் சிக்கினர். இதில் ஒரு விமானி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். மற்றொருவர் பலத்த காயம் அடைந்தார்.

விபத்தி ஜெனிபர் கேசி என்ற பெண் விமானி உயிரிழந்தார். இவரது இறப்புக்கு ஆழந்த இரங்கல் தெரிவித்துள்ள கனடா விமானப்படை காயமடைந்த மற்றொரு விமானி விரைவில் குணமடைய வாழ்த்துகளையும் தெரிவித்துள்ளது.

## நியூசிலாந்து பிரதமருக்கும் அனுமதி மறுத்த உணவகம்

### சமூக இடைவெளியப் பேணுவதில் கருத்து



நியூசிலாந்து பிரதமர் ஜெசிந்தா தனது வருங்காலக் கணவருடன் உணவு விடுதி ஒன்றுக்குச் சென்ற போது அவரை உள்ளே அனுமதிக்க முடியாது என்று ஹோட்டல் நிர்வாகம் கூறியது.

நியூசிலாந்து கொரோனா வைரஸ் பாதிப்பில் இருந்து படிப்படியாக மீண்டு வருகிறது. அங்கு ஊரடங்கு கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டு ஹோட்டல்கள், சினிமா தியேட்டர்கள், வணிக வளாகங்கள் உள்ளிட்டவை மீண்டும் திறக்கப்பட்டுள்ளன. எனினும் முக கவசம் அணிதல், சமூக இடைவெளி பின்பற்றுதல் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் நியூசிலாந்து பிரதமர் ஜெசிந்தா தனது வருங்கால கணவர் கிளார்க் உடன் தலைநகர் வெலிங்டனில் உள்ள ஒரு விடுதிக்குச் சாப்பிடச் சென்றார். அரசு விதித்துள்ள கட்டுப்பாடுகளின்படி குறிப்பிட்ட எண்ணிக்கையிலான நபர்கள் மட்டுமே ஓட்டலுக்குள் அனுமதிக்கப்படுவார்கள். அந்த வகையில், பிரதமர் ஜெசிந்தா அங்கு சென்றபோது அனைத்து இருக்கைகளும் நிரம்பி இருந்தன.

இதனால் பிரதமரை உள்ளே அனுமதிக்க முடியாது என அந்த ஹோட்டல் நிர்வாகம் கூறியது. எந்த விதிமுறைகளையும் மீறாமல், எதையும் மாற்றாமல், சிறிது நேரம் அங்கேயே காத்திருந்தார் பிரதமர். பின்னர் இருக்கைகள் காலியானதும் ஹோட்டல் ஊழியர்கள் பிரதமரை உள்ளே அழைத்து, உணவு பரிமாறினர்.

இந்தச் சம்பவத்தில் தங்கள் மீதுதான் தவறு உள்ளதாக நியூசிலாந்து பிரதமர் விளக்கமளித்துள்ளார். முன்பதிவு செய்யாமல் சென்று விட்டதாகவும், நாட்டின் பிரதமராக இருந்தாலும் சமூக இடைவெளி உள்ளிட்ட நடவடிக்கைகள் அனைவருக்கும் பொதுவானது தான் எனவும் அவர் கூறினார்.

மற்றவர்களை போலத்தான் தானும் காத்திருந்ததாகவும், இதில் பெரிதாக ஒன்றும் இல்லை என்றும் தெரிவித்தார். மேலும் அரசுக்கு ஒத்துழைப்பு கொடுத்து சிறப்பாக சேவை செய்யும் உணவக ஊழியர்களையும் அவர் பாராட்டினார்.

கொரோனாவை கட்டுப்படுத்த தற்போதைக்கு சமூக இடைவெளி மட்டுமே தீர்வாக பார்க்கப்படுகிறது. அந்த வகையில், பிரதமராக இருந்தாலும் சமூக இடைவெளியை பின்பற்றி காத்திருக்கும்படி அறிவுறுத்திய ஊழியர்களுக்கும், இதனை எளிமையான முறையில் அணுகிய பிரதமருக்கும் பாராட்டுகள் குவிந்து வருகின்றன.

## 50 லட்சத்தை நெருங்குகிறது கொரோனா வைரஸ் தொற்று

உலகம் முழுவதும் கொரோனா தொற்று கண்டறியப்பட்டவர்களின் எண்ணிக்கை 50 லட்சத்தை நெருங்கி விட்டது. 3.2 லட்சம் மக்கள் கொரோனாவால் இதுவரை உயிரிழந்துள்ளனர்.

சீனாவின் வுஹான் நகரில் கடந்த ஆண்டு இறுதியில் வெளிப்பட்ட கொரோனா வைரஸ் தற்போது உலகின் 213 நாடுகளில் பரவி பெரும் மனித இழப்புகளை ஏற்படுத்தி வருகிறது.

இந்த வைரசை கட்டுப்படுத்தும் மருந்துகள் இதுவரை கண்டுபிடிக்கப்படாத நிலையில், வைரசின் தீவிரம் அதிகரித்துள்ளது. வைரஸ் பரவலை கட்டுப்படுத்த உலக நாடுகள் போராடி வருகின்றன.

இந்நிலையில், உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் தாக்குதலால் பாதிப்பு அடைந்தோர் எண்ணிக்கை 50லட்சத்தை நெருங்கி உள்ளது. நேற்றிரவு நிலவரப்படி உலகம் முழுவதும் 49 லட்சத்து 59 ஆயிரத்து 419 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதுவரை 3 லட்சத்து 20 ஆயிரத்து 137 பேர் உயிரிழந்துள்ளனர். கொரோனாப் பாதிப்பில் இருந்து மீண்டவர்களின் எண்ணிக்கை 19 லட்சத்து 7 ஆயிரத்து 423 ஆக உயர்ந்துள்ளது. கொரோனாவுக்கு சிகிச்சை பெறுபவர்களில் 44 ஆயிரத்து 767 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.

கொரோனா வைரசால் அதிகம் பாதிப்பு அடைந்த நாடுகளின் பட்டியலில் அமெரிக்கா முதலிடத்திலும், ரஷ்யா இரண்டாவது இடமும், ஸ்பெயின் மூன்றாவது இடத்திலும் உள்ளன. இந்தியா 11ஆவது இடத்தில் உள்ளது.

## ரஷ்யாவில் 3 லட்சம் பேருக்கு கொரோனா தொற்று பரவியது

ரஷ்யாவில் கொரோனா வைரசால் பாதிப்பு அடைந்தோர் எண்ணிக்கை 3 லட்சத்தை நெருங்கி உள்ளது.

உலகை அச்சுறுத்தி வரும் கொரோனா வைரஸ் அமெரிக்காவை தொடர்ந்து ரஷ்யா நாட்டில் கோரத் தாண்டவம் ஆடி வருகிறது.

கொரோனாவால் அதிகம் பாதிக்கப்பட்ட நாடுகள் வரிசையில் அமெரிக்கா முதலிடத்திலும், ரஷ்யா இரண்டாவது இடத்திலும் உள்ளன.

கடந்த சில நாட்களாக ரஷ்யாவில் ஒரு நாளின் சராசரி பாதிப்பு விகிதம் 10 ஆயிரமாக இருந்து வருகிறது. கொரோனா தொற்றுகளை கட்டுப்படுத்த அதிபர் புதின் பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்.

இந்த நிலையில், ரஷ்யாவில் கொரோனா வைரசால் பாதிப்பு அடைந்தோர் எண்ணிக்கை 3 லட்சத்தை நெருங்கி உள்ளது.

கடந்த 24 மணி நேரத்தில் 9 ஆயிரத்து 263 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் ரஷ்யாவில் வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை தற்போது 2லட்சத்து 99 ஆயிரத்து 941 ஆக அதிகரித்துள்ளது.

கொரோனா தொற்றுக்கு மேலும் 115 பேர் உயிரிழந்ததால், அங்கு இறப்பு எண்ணிக்கை 2 ஆயிரத்து 837 ஆக அதிகரித்துள்ளது. கொரோனா தொற்றில் இருந்து 76 ஆயிரத்து 130 பேர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்


# கொரோனாவைக் கட்டுப்படுத்த ரூபாய் 33 ஆயிரம் கோடி செலவு

கொரோனா தடுப்பு நடவடிக்கைகளுக்காக உலக சுகாதார நிறுவனத்துக்கு அடுத்த 2 ஆண்டுகளில் சீனா ரூ.33 ஆயிரம் கோடி அளிக்கும் என சீன அதிபர் ஜின்பிங் தெரிவித்தார்.

உலக சுகாதார நிறுவனத்தின் 73ஆவது கூட்டத்தொடர் நேற்றுமுன்தினம் ஜெனிவாவில் தொடங்கியது. அதில், மற்ற நாட்டு தலைவர்களைப் போல், சீன அதிபர் ஜின்பிங்கும் காணொலி காட்சி மூலம் பங்கேற்று பேசினார்.

அவர் பேசுகையில், கொரோனா தடுப்பு நடவடிக்கைகளுக்காக உலக சுகாதார நிறுவனத்துக்கு அடுத்த 2 ஆண்டுகளில் சீனா ரூ.15 ஆயிரத்தும் கூடுதலான நிதிய வழங்கவுள்ளது. இது, வளரும் நாடுகளுக்கு பயன்படும்.

கொரோனா பரவல் குறித்த அனைத்து தகவல்களையும் உலக சுகாதார நிறுவனத்துக்கும், மற்ற நாடுகளுக்கும் சீனா உரிய நேரத்தில் அளித்துள்ளது. நோயை கட்டுப்படுத்துவது



மற்றும் சிகிச்சை அனுபவங்களை இதர நாடுகளுடன் பகிர்ந்து கொண்டுள்ளோம். எனவே, கொரோனா குறித்து பாரபட்சமின்றி ஆய்வு நடத்துவதை சீனாவும் ஆதரிக்கிறது என்று கூறினார்.

# ஆயிரம் பேரை பணி நீக்கம் செய்கிறது ஸ்விகி நிறுவனம்

## ஆன்லைன் மூலம் உணவு விநியோகம்

செய்யும் நிறுவனமான ஸ்விகி நிறுவனம் ஆயிரம் 100 பேரை வேலையிலிருந்து நீக்கப்போவதாக அறிவித்துள்ளது.

கொரோனா பரவலால் வர்த்தகம் முடங்கியதால் தனியார் நிறுவனங்கள் பெரும் இழப்பை சந்தித்துள்ளன. இந்த நிலையில் இணையம் மூலம் உணவு விநியோகம் செய்யும் நிறுவனமான ஸ்விகி நிறுவனம் ஆயிரம் 100 பேரை வேலையிலிருந்து நீக்கப்போவதாக அறிவித்துள்ளது.

இது குறித்து அந்த நிறுவனத்தின் தலைமைநிர்வாக அதிகாரியான ஸ்ரீஹர்ஷா மெஜடி தங்களது ஊழியர்களுக்கு அனுப்பியுள்ள மின் அஞ்சலில், 'துரதிர்ஷ்டவசமான இந்த ஆட்குறைப்பு பணியினை நாங்கள் மேற்கொள்ள இருக்கிறோம். ஸ்விகிக்கு இன்று சோகமான நாட்களில் ஒன்று' என கூறியுள்ளார்.

நிர்ணயிக்கப்பட்ட லாபத்தை அடைய குறைந்த ஊழியர்களை கொண்டு இயங்கவும், செலவினங்களைக் கட்டுப்படுத்தவும் ஸ்ட்விகி நிறுவனம் முடிவெடுத்துள்ளதாக ஸ்ரீஹர்ஷா கூறியுள்ளார். மேலும் கொரோனா தொற்றில் ஏற்பட்டுள்ள நெருக்கடியான இந்த தருணத்தில் மேலும் நெருக்கடிகளை எதிர்கொள்வதை தவிர்க்க, செலவினங்களை குறைக்க, நிறுவனம் திட்டமிட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஏற்கனவே சோமோட்டோ நிறுவனமும் 13 சதவிகிதம் பேரை பணி நீக்கம் செய்வதாக அறிவித்தது குறிப்பிடத்தக்கது.

## இந்தியாவில் ஜூன் முதல் பயணிகள் ரயில் சேவை!


இந்தியாவில் கொரோனா ஊரடங்கு, உள்ளிருப்பு முடக்கத்திற்குப் பின்னர் அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் ரயில் சேவை மீண்டும் தொடக்கப்படவுள்ளது.

நாடு முழுவதும் ஏ.சி. அல்லாத 200 ரயில்கள் இயக்கப்படவுள்ளதாக மத்திய ரயில்வே அமைச்சர் பியூஷ் கோயல் அறிவித்துள்ளார்.

ஊரடங்கு உத்தரவால் கடந்த மார்ச் 25ஆம் திகதியில் இருந்து பயணிகள் ரயில் சேவையை இந்திய ரயில்வேத் துறை நிறுத்தி வைத்துள்ளது. கடந்த 12ஆம் திகதியில் இருந்து சிறப்பு ரயில்களை மட்டும் இயக்கி வருகிறது.

இந்தியாவில் 4ஆவது கட்ட ஊரடங்கு உத்தரவு வருகிற 31ஆம் திகதி முடிவடைகிறது. இந்த நிலையில் ஜூன் முதலாம் திகதியில் இருந்து ஏ.சி. அல்லாத 200 ரயில்கள் இயக்கப்பட உள்ளதாக மத்திய ரயில்வே அமைச்சர் பியூஷ் கோயல் அறிவித்துள்ளார்.

வழக்கமான கால அட்டவணைபடி ரெயில்கள் இயக்கப்படும் என தகவல்கள் தெரிவிக்கின்றன.



# 5 சூறாவளிகளுக்கு சமமானது 'அம்பன்'

இந்தியாவின் மேற்கு வங்காளம் மாநிலம் மற்றும் பங்களாதேஷ் இடையே இன்று கடக்கவுள்ள 'அம்பன்' அதித்தீவிர புயல் 5 சூறாவளிகளுக்குச் சமமானது என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

'அம்பன்' தீவிர புயல் இன்று இந்தியக் கரையை கடக்கும் நிலையில், ஒடிசா முதல்வர் நவீன் பட்நாயக், மேற்கு வங்காளம் மாநில முதல்வர் மம்தா பானர்ஜி ஆகியோருடன் உள்துறை அமைச்சர் அமித் ஷா தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார்.

முன்னதாக திங்கட்கிழமை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, உள்துறை அமைச்சர் மற்றும் உயர்மட்ட அதிகாரிகளுடன் 'அம்பன்' புயலை எதிர்கொள்வது குறித்து அவசர ஆலோசனை மேற்கொண்டார்.

'அம்பன்' அதித்தீவிர புயல் மேற்கு வங்க கடற்கரையில் நாளை பிற்பகல் கரையைக் கடக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அப்போது, மிகக்கடுமையான சூறாவளி புயலாக 195 கி.மீ. வேகத்தில் காற்று வீசும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஒரு மணி நேரத்திற்கு 220 முதல் 230 கிலோ மீற்றர் வேகத்தில் நகரும் இந்தப் புயலானது, 1999ஆம் ஆண்டு ஒடிசாவைத் தாக்கி சுமார் 10 ஆயிரம் பேரின் உயிரைக் குடித்த சூப்பர் புயலுக்குப் பின்னர் வங்காள விரிகுடாவில் உருவாகியுள்ள மிக மோசமான புயல் என்று கணிக்கப்பட்டுள்ளது.

''மேற்கு வங்காளம் மக்கள் புதன்கிழமை பகல் 11 மணி வரை எச்சரிக்கையாக இருக்க வேண்டும். வீட்டை விட்டு யாரும் வெளியே வரவேண்டாம். இதன் காரணமாகக் கடலோர மாவட்டங்களில் வசிக்கும் 3 லட்சம் பேர் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

கொரோனா வைரஸ் காரணமாக முகாமில் இருப்பவர்கள் கட்டாயமாக மாஸ்க் அணிய வேண்டும்" என்று வலியுறுத்தியுள்ளார் மாநில முதலமைச்சர் மம்தா பானர்ஜி.

## ஒரே நாளில் ஒரு லட்சம் கொரோனா பரிசோதனை

கொரோனா வைரஸ் தொற்றின் தாக்கம் இந்தியாவில் ஒரு லட்சத்தைத் தாண்டியிருக்கும் நிலையில் நேற்று ஒரே நாளில் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட கொரோனா பரிசோதனைகள் செய்யப்பட்டுள்ளன.

நேற்று ஒரே நாளில் அதிகபட்சமாக ஒரு லட்சத்து 8 ஆயிரத்து 233 மாதிரிகள் பரிசோதனை செய்யப்பட்டுள்ளன.

இந்தியாவில் மே மாதம் முதலாம் திகதியில் இருந்து கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்த வண்ணம் உள்ளது. குறிப்பாக மகாராஷ்டிரா, டெல்லி, தமிழ்நாடு, குஜராத் மாநிலங்களில் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை தலா 10 ஆயிரத்தைத் தாண்டியுள்ளது.

மகாராஷ்டிரா மாநிலத்தில் கடந்த இரண்டு நாட்களாக 2 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டதால், அங்கு பாதிக்கப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை 35 ஆயிரத்தைத் தாண்டியுள்ளது.

இந்தியாவில் கொரோனாவைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு பரிசோதனைகளை அதிகரிக்க வேண்டும் என்று எதிர்க் கட்சிகள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர்.

இதுவரை 24 லட்சத்து 25 ஆயிரத்து 742 மாதிரிகள் எடுத்து கொரோனா பரிசோதனை செய்யப்பட்டுள்ளன என மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அலுவலகம் தெரிவித்துள்ளது.

# ஒரிவருக்குத்தான் தொற்று எனில் அலுவலகத்தை மூடவேண்டாம்

## இந்திய மத்திய சுகாதார அமைச்சு புதிய வழிகாட்டல்

பணி இடங்களில் ஓரிருவருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டாலும் அலுவலகத்தை மூடவேண்டியவதில்லை என்று பணியிடங்களில் கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பான புதிய வழிகாட்டுதல்களில் இந்திய மத்திய சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

இந்தியாவில் கொரோனா வைரஸ் பாதிப்பு ஒரு லட்சத்தை கடந்துள்ளது. புதிய நோய்த்தொற்று தொடர்ந்து அதிகரித்து வரும் நிலையில், ஊரடங்குக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டு, பல்வேறு தொழில்கள் தொடங்க நிபந்தனைகளுடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், அலுவலகங்களில் கொரோனா தடுப்புப் பணிகள் தொடர்பான புதிய வழிகாட்டுதல்களை மத்திய சுகாதார அமைச்சகம் வெளியிட்டுள்ளது.

அதில், ஓர் அலுவலகத்தில் ஒன்றிரண்டு கொரோனா பாதிப்பு இருந்தால் முழுமையாக அலுவலகத்தை மூட வேண்டியதில்லை என்றும், கிருமிநாசினி தெளித்துவிட்டு பணிகளைத் தொடரலாம் என்றும் கூறப்பட்டுள்ளது.

பெரிய அளவில் பாதிப்பு இருந்தால், கிருமிநீக்கம் செய்யப்பட்டு 48 மணி நேரத்திற்கு அலுவலகத்தை மூட வேண்டும். கட்டடம் போதுமான அளவு கிருமி நீக்கம் செய்யப்பட்டு, மீண்டும் பணியை தொடங்க ஏற்றதாக அறிவிக்கப்படும் வரை, அனைத்து ஊழியர்களும் வீட்டிலிருந்து வேலை செய்யலாம்.

ஊழியர்கள் காய்ச்சல் போன்ற நோயால் பாதிக்கப்பட்டால் அலுவலகம் செல்லக்கூடாது. உள்ளூர் சுகாதார அதிகாரிகளிடமிருந்து மருத்துவ ஆலோசனை பெறவேண்டும். கொரோனா உறுதி செய்யப்பட்டாலோ, சந்தேகத்தின் அடிப்படையில் சோதனை நடத்தினாலோ அவர்கள் தங்கள் அலுவலக அதிகாரிகளுக்கு தெரிவிக்க வேண்டும் என்றும் சுகாதாரத்துறை கூறி உள்ளது.

# வதந்தியை நம்பி ஆயிரக்கணக்கில் மும்பையில் திரண்ட வெளிமாநில தொழிலாளர்கள் ஏமாற்றம்

சிறப்பு ரயில்கள் இயக்கப்படுவதாக வெளியான வதந்தியை நம்பி வெளிமாநிலத் தொழிலாளர்கள் ஆயிரக்கணக்கில் மும்பை ரயில் நிலையத்தில் திரண்டதால் பரபரப்பு ஏற்பட்டது.

இந்தியாவில் ஊரடங்கால் பாதிக்கப்பட்ட புலம்பெயர் தொழிலாளர்களை அவர்களின் சொந்த மாநிலங்களுக்கு அனுப்பி வைப்பதற்காக, பல்வேறு நகரங்களில் இருந்து ஷ்ராமிக் சிறப்பு ரயில்கள் இயக்கப்படுகின்றன. இந்த ரயில்களில் பயணம் செய்வதற்கு, அந்தந்த பகுதிகளில் உள்ள அதிகாரிகளிடம் பெயரை பதிவு செய்ய வேண்டும். அதன்படி தொழிலாளர்கள், உரிய நடைமுறைகளின்படி அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

மகாராஷ்டிர மாநிலத் தலைநகர் மும்பை பாந்த்ரா ரயில் நிலையத்தில் இருந்து பீகார் மாநிலம் பூர்ணியா நகருக்கு நேற்று ஷ்ராமிக் சிறப்பு ரயில் இயக்கப்பட்டது. இந்த ரயிலில் பயணம் செய்வதற்காக பதிவு செய்யப்பட்ட பயணிகள் சுமார் ஆயிரம் பேர் இன்று காலையில் ரயில் நிலையத்திற்கு வந்துவிட்டனர்.



இதேபோல் பதிவு செய்யாமலும் ஏராளமானோர் ரயில் நிலையத்திற்கு வந்தனர். ரயில் நிலையம் அருகில் உள்ள பாலம் மற்றும் சாலையிலும் ஆயிரக்கணக்கானோர் திரண்டிருந்தனர். இதனால் அங்கு திடீர் பரபரப்பு ஏற்பட்டது. அங்கு பொலிஸார் குவிக்கப்பட்டனர்.

சொந்த ஊர்களுக்கு செல்வதற்கு பதிவுசெய்து, அதிகாரிகளால் அழைப்பு விடுக்கப்பட்ட தொழிலாளர்களை மட்டும் ரயிலில் பயணம் செய்ய பொலிஸார் அனுமதித்தனர்.

மற்றவர்களை அங்கிருந்து பொலிஸார் கலைத்தனர். சொந்த ஊர்களுக்கு செல்வதற்காக அவசரம் அவசரமாக ஓடி வந்த தொழிலாளர்கள் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர்.

பீகார் மற்றும் உத்தர பிரதேசத்திற்கு திடீர் சிறப்பு ரெயில்கள் இயக்கப்படுவதாக வதந்தி பரவியதால் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் அங்கு திரண்டதாக தகவல் வெளியாகி உள்ளது.



# தமிழ் மக்களின் மனதைப் புண்படுத்தி அரசு அரங்கேற்றிய போர் வெற்றி விழா

































# அம்பாறை காரைதீவில் கடல் 100 மீற்றர் மேவி ஊருக்குள்!

அம்பாறை மாவட்டம் காரைதீவு பிரதேசத்தில் கடல் சீற்றத்தின் காரணமாக 100 மீற்றர் தாண்டி ஊருக்குள் கடல் நீர் புகுந்துள்ள நிலையில் சம்பவ இடத்திற்கு சென்று காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ண பிள்ளை ஜெயசிறில் சக பிரதேச சபை உறுப்பினர்களும் பார்வையிட்டுள்ளனர்.

குறிப்பாக கடலோர வீதியை தாண்டி ஊருக்குள் கடல் நீர் நேற்று செவ்வாய்க்கிழமை முற்பகல் உட்புகுந்துள்ளது. இதனால் மீனவர்களின் வலைகள் தோணிகள் என்பன காரணமாக 100 மீற்றர் தூரத்திற்கு இழுத்து செல்லப்பட்டு கிடந்தன. இதனை காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில், சக பிரதேச சபை உறுப்பினர்களும் கேள்வியுற்று சம்பவ இடத்திற்கு சென்று கள ஆய்வுகளை மேற்கொண்டு சேதமடைந்த இடங்களைப் பார்வையிட்டனர்.

அத்துடன் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு ஆறுதல் தெரிவித்து அவர்களுக்கு தேவையான உதவிகளை மேற்கொள்வார்கள் எனக் குறிப்பிட்டனர். இந்தப் பிரதேசத்தில் கடல் நீர் ஊருக்குள் புகுந்து பள்ளமான இடத்தில் தேங்கி காணப்படுவதுடன் கடலிலிருந்து 65 மீற்றர் அப்பால் போடப்பட்டுள்ள எல்லை கல்லிற்கு அருகில் வரை கடல் மட்டம் உயர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.





# மீண்டும் தீவிரவாதத் தாக்குதல் நாட்டில் நடக்கும் சாத்தியமா?

## இல்லவே இல்லை என்று மறுக்கின்றார் பாதுகாப்புச் செயலாளர் கமல் குணரத்ன

**கொழும்பு,மே20**

**தீவிரவாதக் கும்பல் மீளத் தாக்குதல்களை நடத்தப்போகின்றன என சமூக வலைத்தளங் களில் பிரசாரப்படுத்தப்பட்டு வரும் தகவல்களில் உண்மை இருக்கின்றதா என்கிற தெளிவூட் டலை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மேஜர் ஜெனரல் கமல் குணரத்ன வெளியிட்டுள்ளார்.**

அறிக்கை ஒன்றை நேற்றுவ்வெளியிட்ட அவர், அப்படியான எந்தவொரு தகவலும் உண்மையில்லை என்று கூறியிருக்கின்றார்.

வெறும் சமூக வலைத்தளங்களில் மாத்திரம் வெளியாகிவரும் இந்தத் தகவல்களை நம்பி மக்கள் குழப்பமடைய வேண்டாம் என்றும் அவர் மக்களைக் கேட்டுக் கொண்டார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் வழிநடத்தப்படுகின்ற பாதுகாப்புத்துறை கட்டமைப்பு மற்றும் புலனாய்வுப் பிரிவு நாட்டிற்கு உள்ளக அல்லது வெளியகத்திலிருந்து வருகின்ற எந்தவொரு அச்சுறுத்தல் தொடர்பிலான தகவல்களை உடனடியாக பெற்றுக் கொள்கின்றதோடு அதனால் மக்கள் எவ்விதத்திலும் அச்சமடைய அவசியமில்லை என்று தனது அறிக்கையில் பாதுகாப்புச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் பாதுகாப்பு திணைக்களத்தின் சிரேஷ்ட முகாமையாளரான கேர்ணல் ஸ்ரீமால் ரொட்றிகோ நேற்று வெளியிட்ட நாட்டின் பாதுகாப்பு தொடர்பிலான அறிக்கை பல்வேறு சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள சூழலுக்கு மத்தியில் ஐ.எஸ்.தீவிரவாத அமைப்புடன் தொடர்புடைய தீவிரவாதக் கும்பல் ஒன்று அழிவு ஒன்றை நாட்டிற்குள் ஏற்படுத்த முயற்சித்திருப்பதாக அவர் அந்த அறிக்கையில் புலனாய்வுப் பிரிவுக்கு தெரிவித்திருக்கின்றார்.



அரச மற்றும் தனியார்துறை நிறுவனங்களில் நுழைத்து கூரிய ஆயுதத்தினால் மக்களைத் தாக்குதல் நடத்த திட்டங்கள் இருக்கலாம் என்ற எச்சரிக்கையை கேர்ணல் ஸ்ரீமால் ரொட்றிகோ செய்திருக்கின்றார்.

இந்த அறிக்கையை நேற்று திங்கட்கிழமை புலனாய்வுப் பிரிவிடம் கேர்ணல் ஸ்ரீமால் ரொட்றிகோ கையளித்தார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

# பலாங்கொடையில் பஸ் விபத்தில் கர்ப்பிணி பலி; நால்வர் படுகாயம்

பலாங்கொடையில் இடம்பெற்ற பஸ் விபத்தில் கர்ப்பிணித் தாய் ஒருவர் பலியாகியுள்ளார்.

இரத்தினபுரி,பலாங்கொடை, தெஹிகஸ்தலாவ பகுதியில் நேற்று முன்தினம் மாலை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

கடும் மழை காரணமாக வீதி வழுக்கல் நிலையில் இருந்ததால் பஸ் விபத்திற்கு உள்ளாகியதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த விபத்தில் கர்ப்பிணித் தாய் ஒருவர் பலியாகியுள்ளமையுடன் நான்கு பேர் படுகாயம் அடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் சிகிச்சைக்காக பலாங்கொடை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். சாரதியை கைது செய்த பொலிஸார் விசாரணைகளை நடத்திவருகின்றனர்.



northern PC PARK
வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
# 10, Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
Northern Pc Park
NPcpark
northernpcpark
Northern PC Park
077 757 0124 021 567 5566
077 336 6443 021 222 9581
075 555 7327 021 222 2050
071 777 2377 021 222 0388
info@pcpark.co
www.pcpark.co
Hot Line:- 077 777 1545

SRI MURUGAN
COMMUNICATION & AGENCY POST OFFICE
உலகெங்குமிருந்து
உறவுகளுக்கு தபால்கள் பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
WESTERN UNION WU
மூலமாக அனுப்பப்படும் பணத்தை பாதுகாப்பாக எம்மிடம் பெற்று பயணப் பையினை பரிசாக வெல்லுங்கள்.
உறவுகளிடமிருந்து அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ்: அதிவிரைவு பாதுகாப்பு நம்பகத் தன்மை.
No.303, K.K.S Road, Jaffna SriLanka Tel : 021 222 2670 / 5392
Email : SriMurugan09@gmail.com Fax:021 222 3214
Srimurugan303@gmail.com

# தினம் ஒரு தலைப்பு சித்திரப்போட்டி

மழலைகளின் பொழுதை பயனுள்ளதாக மாற்றுவோம்





படம் 1



படம் 2

படம் 1
**பா. தனுபன் - தரம் 6**
**யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி**

படம் 2
**ஆர். அஜிஷன் - தரம் 2**
**தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி**

இந்த இரு சித்திரங்களும் இறுதிப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இன்றைய சித்திரப் போட்டிக்கான தலைப்பு- 'நீதிமன்றம்'

**நேற்றைய தினம் அதிகளவான மாணவர்கள் 'நினைவேந்தல்' எனும் தலைப்பில் சித்திரங்களை வரைந்து அனுப்பியிருந்தனர். தரமான அனைத்தையும் பிரசுரிக்க முடியாததால் மேலதிகமாகத் தெரிவு செய்யப்பட்ட சித்திரங்களை வரைந்தவர்களது பெயர் விவரம் மாத்திரம் பிரசுரிக்கப்படுகிறது.**

லனுஜன் நவரட்ணம் – தரம் 3
North Bridlewood Junior Public School, Scarboough, Canada

டி. ஹரிஸ்மன் – தரம் 8
யா/ புனித பத்திரிசியார் கல்லூரி

இ. கார்த்திகன் – தரம் 8
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

அ. க. ரிஷாளன் – தரம் 11
யா/ பரியோவான் கல்லூரி

விஜயநிதி கருன் – தரம் 7
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

அறிவுச்செல்வன் அறிவுஅரங்கன் – தரம் 8
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

அ. அறிவுஆதித்தன் – தரம் 9
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

எட்ரியன் லுகி ஜோன் – தரம் 8
ஓகேஜ சர்வதேச பாடசாலை, வத்தளை

அருள்நாத் அக்சயன் – தரம் 6
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

வி. சலோமி – தரம் 6
யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

கே. எழில்நிலவன் – தரம் 6
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

றொபின்சன் ஷெர்வின் – தரம் 4
பம்பலப்பிட்டி சென் பீற்றர்ஸ் கல்லூரி, கொழும்பு

தி. கோவெழிலன் – தரம் 4
யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்

கசிந்திரா கிரிஸ்பின் – தரம் 5
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

என். கொட்வின் – தரம் 4
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

என். சேர்லின் – தரம் 1
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

அன்றியா தக்ஷரா காண்டீபன் – தரம் 2
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

காலைக்கதிர் Kalaikathir

**நீதிமன்றம்**

16 வயதிற்கு உட்பட்ட மாணவர்களுக்கு



தினம் ஒரு தலைப்பு
சித்திரப்போட்டி

**இன்று (20/05/2020) தலைப்பு**
**நீதிமன்றம்**

ஒவ்வொரு நாளுக்குரிய தலைப்பும் முதல் நாள் மாலையில் தரப்படும். அத்தலைப்புக்குப் பொருத்தமான சித்திரத்தை அன்று மாலை 6 மணிக்கு முன்னதாக எமது மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

* சித்திரத்தினை A4 அளவுள்ள வெள்ளைத்தாளில் வரைய வேண்டும்.
* சித்திரங்கள் வர்ணத்தில் அல்லது கருப்பு வெள்ளையாக அமையலாம்.
* தெரிவுசெய்யப்படும் சித்திரங்கள் காலைக்கதிரின் முகப் புத்தகத்தில் பகிரப்படும்.
* தினமும் தெரிவுசெய்யப்படும் தரமான ஒரு சித்திரம் காலைக்கதிர் பத்திரிகையில் பிரசுரமாகும்.
* போட்டி முடிவில் பரிசுக்குரிய சித்திரங்களுக்கு பணப் பரிசில்கள் வழங்கப்படும்.

சித்திரங்கள் தெளிவான முறையில் படம்பிடிக்கப்பட்டு வரைந்த மாணவரின் பெயர், பாடசாலை, தரம், பெற்றோரின் தொலைபேசி இலக்கம் ஆகிய விபரங்களுடன் kalaikkathiredu@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

**மேலதிக விபரங்களுக்கு: 076 443 8623**

## ஆற்று மண்ணை ஏற்ற முற்பட்ட

# 6 டிராக்டர்கள், 4 டிப்பர்கள் பொலிஸார் மடக்கினார்கள்

### சம்மாந்துறையில் சம்பவம்



சம்மாந்துறை பகுதியில் உள்ள வயல்வெளி சார்ந்த ஆற்றுப்படுக்கைகளில் சட்டவிரோதமாக ஆற்று மண்ணை ஏற்ற முற்பட்ட 6 டிராக்டர்கள் மற்றும் 4 டிப்பர் லொறிகள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் சூழலை பயன்படுத்தி சம்மாந்துறை பொலிஸ் நிலைய எல்லைக்குட்பட்ட பல இடங்களில் சட்டவிரோதமாக வயல்வெளிகள் ஆற்றுப்படுக்கைகளில் இனந்தெரியாத நபர்கள் ஆற்று மண்களை அகழ்ந்து வருகின்றனர் என நேற்று செவ்வாய்க்கிழமை காலை சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.டி.எச். ஜயலத்திற்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டிற்கு அமைய சம்பவ இடத்திற்கு சென்ற பொறுப்பதிகாரி தலைமையிலான துர்நடத்தை தடுப்பு பிரிவின் உப பொலிஸ் பரிசோதகர் ஜனோசன் உள்ளிட்ட குழுவினர் சட்டவிரோத மண் ஏற்றப் பயன்படுத்தப்பட்டவை என்ற சந்தேகத்தில் 6 டிராக்டர்கள் மற்றும் 4 டிப்பர் லொறிகளை மீட்டு சம்மாந்துறை பொலிஸ் நிலையத்திற்கு எடுத்து வந்தனர்.

இவ்வாறு பொலிஸ் நிலையத்திற்கு எடுத்து வரப்பட்ட வாகனங்கள் மற்றும் சாரதிகளின் விவரங்கள் பதியப்பட்டு விசாரணை மேற்கொண்ட பின்னர் இன்று சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.



# காலாவதியான லைசன்ஸ் செல்லுபடிக்காலம் நீடிப்பு

கொழும்பு, மே 20

ஏப்ரல் 16 முதல் மே 31 வரையான காலப்பகுதியில் காலாவதியாகும் ஒவ்வொரு சாரதி அனுமதிப்பத்திரத்தின் செல்லுபடியாகும் காலம் ஜூலை31ஆம்திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த அமரவீர, அதிசிறப்பு வர்த்தமானி ஊடாக இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

இந்த விதிமுறைகள் மோட்டார் போக்குவரத்து சட்டத்தின் கீழ் மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் வழங்கிய அனைத்து சாரதி அனுமதிப்பத்திரங் களுக்கும் பொருந்தும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# ஆசிரியர்களின் எதிர்பார்ப்புகள் விவரம் திரட்டும் கல்வி அமைச்சு

அரச பாடசாலையில் கடமையாற்றும் ஆசிரியர்கள் தங்களுக்கு விருப்பமான இடங்களையும் கற்பிப்பதற்கான பாடங்களையும் கண்டறிய ஆய்வு ஒன்றை நடத்த கல்வி அமைச்சு திட்டமிட்டுள்ளது.

அதற்காக https//moe.gov.lk இல் Teacher Survey Form அல்லது https://nemis.moe.gov.lk என்ற இணைய முகவரிக்குள் பிரவேசித்து கணக்கெடுப்பு படிவத்தை பெற்றுக்கொள்ள முடியும்.

அங்கு கூறப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின்படி, 30.05.2020 க்கு முன்னர் வினா கொத்தை நிறைவு செய்ய வேண்டும் என கல்வியமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

சசிகா லேணர்ஸ்



முறையான சாரத்தியத்தைக் கற்றுக் கொள்ள எம்முடன் இணைந்து கொள்ளுங்கள்.

வாகனப் பயிற்சியாளர்களுக்கு நேர தாமதமின்றி பயிற்சி வழங்கப்படும். (கிளை நிறுவனங்களிலும் வாகனப் பயிற்சியை மேற்கொள்ளலாம்.)

விண்ணப்பதாரிகள் கட்டணங்களை தவணை முறையில் செலுத்த முடியும்.

எழுத்துப் பரீட்சைக்கான வகுப்புகளும், வாகனத் தொழில்நுட்ப வகுப்புகளும் நடைபெறும்.

எழுத்துப் பரீட்சைக்கான வீதி ஒழுங்கு நூல், பரீட்சை மாதிரி வினாத்தாள், செய்முறைப் பரீட்சைக்கு வாகன சாரத்தியம் சம்பந்தமான குறிப்புக்கள் என்பனவும் வழங்கப்படும்.

எழுத வாசிக்கத் தெரியாதவர்களுக்கு வாய்மொழி மூலப் பரீட்சையில் தோற்றுவதற்கு ஒழுங்குகள் செய்து தரப்படும். விரைவில் எழுப் பரீட்சை ஒழுங்கு செய்து Learners Permit பெற்றுத் தரப்படும்.

தலைமை காரியாலயம்.
இல.57, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.
HotLine - 077 722 6847
021 221 7678
077 614 0361
Sasika Learners
Sasika Driving Schoolgmail.com

THE SASIKA LEARNERS

அரச அதிகாரம் பெற்ற சாரதிப் பயிற்சிப் பாடசாலை

DS NO - 882

கிளை நிறுவனங்கள் –

வேலணை
வங்களாவடிச் சந்தி, வேலணை
021 221 5472
070 301 3012

காரைநகர்
021 225 2454
070 510 2484

கே.கே.எஸ்.வீதி, மல்லாகம்.
021 224 3393
070 301 3014

பண்டத்தரிப்பு
021 225 2333
071 255 4135

சங்கானை
ஓடக்கரை வீதி, சங்கானை
021 225 1664
070 301 3016

பருத்தித்துறை வீதி, நெல்லியடி
021 226 0999
071 775 0999

யாழ்ப்பாணம் (Town)
இல.281 C, மணிக்கூட்டு கோபுர வீதி,
யாழ்ப்பாணம்
(போதனா வைத்தியசாலை பின்புறமாக)
021 221 5472
07 301 3012



# அமைச்சுச் செயலாளராக மற்றொரு படை அதிகாரி

மகாவலி, வேளாண்மை, நீர்ப்பாசனம் மற்றும் ஊரக வளர்ச்சி அமைச்சகத்தின் புதிய செயலாளராக ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் சுமேதா பெரேரா நியமிக்கப்பட்டுள்ளார். மேஜர் ஜெனரல் சுமேதா பெரேரா இலங்கை இராணுவத்தின் மூத்த வீரர்.

பாதுகாப்புச் செயலாளர் ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் கமல் குணரத்ன, இராணுவ தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

அண்மையில் சுகாதார அமைச்சின் செயலாளராக ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# யாழ் மவட்டத்தில் 66 குடும்பங்கள் காற்றின் தாக்கத்தினால் பாதிப்பு!

யாழ்ப்பாண மாவட்டத்தில் காற்றின் தாக்கத்தின் காரணமாக 66 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவுப் பணிப்பாளர் தெரிவித்தார்.

அம்பன் சூறாவளியின் தாக்கமானது நாட்டின் பல்வேறுபட்ட பகுதிகளிலும் உணரப்பட்டுள்ள நிலையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் காற்றின் வேகமானது உயர்வாக உணரப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தை பொறுத்தவரை காற்றின் தாக்கத்தின் காரணமாக 66 குடும்பங்களைச் சேர்ந்த 229 அங்கத்தவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என யாழ் மாவட்ட அனர்த்த முகாமை பிரிவிற்கு அறிக்கையிடப்பட்டுள்ளதாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பணிப்பாளர் என்.சூரிராஜ் தெரிவித்துள்ளார்.

கடந்த பதினேழு மற்றும் பதினெட்டாம் திகதி வீசிய காற்றின் தாக்கத்தின் காரணமாக குறித்த பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

அதிலும் குறிப்பாக நெடுந்தீவு பகுதியில் 14 குடும்பங்களைச் சேர்ந்த 54 அங்கத்தவர்களும், உடுவில் பிரதேச செயலகத்துக்குட்பட்ட ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 5 அங்கத்தவர்களும், நல்லூர் பிரதேச செயலகத்தில் ஒரு குடும்பத்தை சேர்ந்த மூன்று அங்கத்தவர்களும், பருத்தித்துறை பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதியைச் சேர்ந்த குடும்பங்களுமாக மொத்தமாக 66 குடும்பங்களைச் சேர்ந்த 229 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும் காற்றின் தாக்கத்தின் காரணமாக 47 வீடுகள் இதுவரை பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

மேலும் ஓரிரு நாட்களுக்கு காற்றின் தாக்கமானது கூடுதலாக காணப்படுவதன் காரணமாக கரையோரப் பகுதிகளில் வசிக்கும் மக்களை மிகுந்த அவதானத்துடன் செயற்படுமாறும் வளிமண்டலத்திணைக்களத்தினரால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

குறிப்பாக மீனவர் சமூகத்தினர் விழிப்பாக



செயற்படுமாறும் அனர்த்த முகாமைத்துவ பிரிவினரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

காற்றின் தாக்கத்தின் காரணமாக பாதிக்கப்பட்டவர்களின் விவரங்கள் அனர்த்த முகாமைத்துவ அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன எனவும் அவர் தெரிவித்தார்.

## மேல் கொத்மலையில் வான்கதவுகள் திறப்பு

மலையகத்தில் தொடர்ச்சியாக பெய்து வரும் அடைமழை காரணமாக நீர்த்தேக்கங்களின் நீர்மட்டமும் வெகுவாக அதிகரித்து வருகின்றது. இந்நிலையில் மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தின் மூன்று வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் பகல் 12.30 இற்கு ஒரு வான்கதவு திறக்கப்பட்ட நிலையில் நீர்மட்டம் அதிகரித்ததால் நேற்றுப் பிற்பகல் ஒரு மணிக்கு மேலும் இரு வான்கதவுகள் திறக்கப்பட்டன. இதனால் சென்கிளயர் நீர்வீழ்ச்சியின் நீர்மட்டமும் அதிகரித்து ரம்மியமாக காட்சியளிக்கின்றது.

# ராஜித கைதுக்கு எதிராக தலைவர்கள் ஆர்ப்பாட்டம்

## களுத்துறைப் பாலம் அருகே நேற்று

வெள்ளை வான் கடத்தல் தொடர்பாக பேசிய முன்னாள் சுகாதாரத்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன கைது செய்யப்பட்டமைக்கு எதிராக களுத்துறை பாலத்திற்கு மேல் ஐக்கிய மக்கள் சக்தி ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியுள்ளது.

நேற்று மாலை இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளது.

இதில் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ, பங்காளிக்கட்சிகளின் தலைவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.





# மாதா சொரூபத்தின் மீது புத்தளத்தில் தாக்குதல்



புத்தளம் - அநுராதபுரம் வீதியில் உள்ள புனித சாந்த மரியாள் தேவாலயத்தின் முன்பக்கமாக அமைக்கப்பட்டிருந்த சாந்த மரியாள் சொரூபத்தின் மீது இனதெரியாதோரால் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்த தாக்குதலினால் சிலையின் கண்ணாடிக் துண்டு பகுதியளவில் சேதமடைந்துள்ளதாகப் புத்தளம் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தை அடுத்து விசாரணைகளை முன்னெடுத்த புத்தளம் பொலிஸார் நேற்று செவ்வாய்க்கிழமை மோப்ப நாய்களின் உதவியுடன் சம்பவம் இடம்பெற்ற இடத்தில் சோதனைகளை முன்னெடுத்தனர்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள பசுமை ஊடக இல்லம் (தனி) வரை. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 20.05.2020 இல் வெளியிடப்பெற்றது.